# <u>சிவில் விமான சேவைகள் அமைச்சு</u>

**சிவில் விமான சேவை அதிகார சபை**

**<u>196 வான்கலமோட்டல் ஒழுங்குமுறையின் கீழ் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் அறிவித்தல்.</u>**

சர்வதேச வழமையான பொது போக்குவரத்து செயற்பாட்டு (International Regular Public Transport Operations) நடவடிக்கைகள் மற்றும் கூலி விமான போக்குவரத்து செயற்பாட்டு (Charter Operations) நடவடிக்கைகளான பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல் விமான சேவைகளை முன்னெடுப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம் மற்றும் அதற்குரிய கோவைகள் உட்பட நிபந்தனைகளுக்கு அமைய விமான செயற்பாட்டுச் சான்றிதழ் மற்றும் விமானக் கம்பனிக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக இல 33/1, ஹல்பே மாவத்தை, கந்தானை இல் உள்ள வரையறுக்கப்பட்ட ஸ்பார்க் எயார் (தனியார்) கம்பனியினால் 2020 செப்டெம்பர் மாதம் 09 ஆம் திகதி சமர்பிக்கப்பட்ட 2020 செப்டெம்பர் மாதம் 08 ஆம் திகதி கொண்ட விண்ணப்பபடிவத்தில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன். விண்ணப்படிவத்திற்கு அமைய வரையறுக்கப்பட்ட ஸ்பார்க் எயார் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றது.

**திரு. ரொபர்ட். எல். ஸ்பிட்டல்**
**திரு. மொஹமெட் ரம்ஸி ரஹீம்**
**திரு. சமின் அத்தநாயக்க**
**திரு. அஷான் டி அல்விஸ்**
**திரு. சுரஞ்ஜன் டி சில்வா**

இக்கம்பனியின் உத்தேச விமானப் போக்குவரத்து செயற்பாடுகள் தொடர்பாக பிரதான பொறுப்பு முகாமைத்துவத்திற்கு திரு. மொஹமெட் ரம்ஸி ரஹீம் அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்பார்க் எயார் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரரின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்படிவத்தின் பிரதியை கட்டுநாயக்க, மினுவன்கொட வீதி, இலக்கம் 152/1, கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபையின்

4 வது மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொது மக்களுக்கு இதனை பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காக தேவையான விமான செயற்பாட்டுச் சான்றிதழ் (Air operator Certificate) உட்பட ஏனைய உரிய அதிகாரங்களை வழங்குவதற்கு முன்னர் சிவில் விமான சேவை சட்டம் விமான போக்குவருத்து சேவையைப் போன்று உரிய தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதனுடன் இணைந்த உள்நாட்டு தேவைகளுக்கு அமைய பாதுகாப்புமிக்க வினைதிறனுடன் கூடிய விமான போக்குவரத்து சேவைகளை நடாத்துவதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகளை கூட்டினைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிசோதனைகளை மேற்கொண்டு இவ் விண்ணப்படிவத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் 2020 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

<u>மேற்கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்துக்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்படிவம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணங்களை அடிப்படையாக கொண்ட விடயங்களை விமான போக்குவரத்து கோவைக்கு அமைய எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியும்</u>. உள்ளடக்கப்பட்டுள்ள சகல வெளிப்பாடுகளின் உண்மை தன்மையை எழுத்து மூல சாட்சிகளுடன் சமர்பிக்கப்பட வேண்டும். இவ்வாறான விஞ்ஞாபனத்தை என்னிடம் சமர்பிக்கும் வேளையில் அவரினால் அதன் பிரதியை விண்ணப்பதாரிக்கு கிடைக்க செய்ய வேண்டியதுடன், அவ்வாறு அனுப்பப்பட்டதாக சான்றிதழை உரிய விஞ்ஞாபனத்துடன் இணைக்க வேண்டும்.

கப்டன் தேமியா அபேவிக்கிரம
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை
பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று
உத்தியோகத்தர்

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை
இலக்கம் 152/1, மினுவங்கொட வீதி,
கட்டுநாயக்க
2020 செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி